யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 6.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2033 | மார்கழி 19 வெள்ளிக்கிழமை (03.01.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 15

## அதி உயர் பாதுகாப்பு வலயத்தில்

# மீளக்குடியமர்வதற்கு புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்!

### மீனவர்கள் கரை திரும்பினர்

(திருநெல்வேலி)

கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சிக் கடலில் தொழிலுக்குச் சென்ற வேளை காணாமல் போனதாகக் கருதப்பட்ட மீனவர்கள் இருவரும் நேற்றுக் கரை திரும்பியுள்ளனர்.

பொலிகண்டியைச் சேர்ந்த காசிநாதர் சுந்தரமூர்த்தி(வயது36), உடுத்

(10ம் பக்கம் பார்க்க)



## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

(நமது நிருபர்)

**யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவதாக இருந்தால் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் அந்த ஆயுதங்களை அவர்கள் எம்மிடம் ஒப்படைக்காமல் ஒரு மூன்றாம் தரப்பினரிடம் ஒப்படைக்கலாம் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் பலகல்ல தெரிவித்துள்ளார்.**

கண்டிக்கு விஜயம் செய்த இராணுவத தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல தலதா மாளிகையில் வழிபாடு நடத்தினார்.

அந்த வழிபாட்டை அடுத்து அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற, பின், அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக பௌத்த பீடாதிபதிகளிடம் விளக்கிக் கூறுகையில், புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையபபட வேண்டும் என்பதையும், அதன் பின்னரே மீள்குடியேற்றம் என்றும் உறுதிபடக் கூறியுள்ளார்.

அஸ்கிரிய,மல்வத்த பீடாதிபதிகளின் சந்திப்பை அடுத்து செய்தியாளர்கள் மாநாடு ஒன்றை இராணுவத் தளபதி லயனல் பலகல்ல நடத்தினார்.

அப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்கள் இருக்கும் வரை அது இராணுவத்தினருக்கு பாரிய அச்சுறுத்தலாகவேயிருக்கும். இந்நிலையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை

(10ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த (உயர்தர)புள்ளி அடிப்படையில்

# ஆயிரம் தகுதிகாண் ஆசிரியர்கள் வட-கிழக்கில் நியமனம் பெறுவர்

(திருகோணமலை)

வடக்குக கிழக்கு மாகாணத்தில் தகுதிகாண் ஆசிரியர்கள் ஆயிரம் பேரை உடனடியாக நியமிப்பதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதல் கட்டமாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நியமிப்பதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு,வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அனுமதி வழங்கியுள்ளதென மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவி வரும்

(10ம் பக்கம் பார்க்க)

# வடக்கு~கிழக்கை பிரிக்கக் கோரி ம.ஐ.மு: போராட்டம் நடத்தும்!

*– தினேஷ் குணவர்த்தனா அறிவிப்பு –*

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணம் இணைக்கப்படாமல் பிரிக்கப்பட வேண்டுமென்று கோரி நாடு தழுவிய போராட்டம் ஒன்றை மக்கள் ஐக்கிய முன்னணி நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன.அப்போதைய அரசு அவசர கால நிலையைப் பயன்படுத்தி இதனை மேற்கொண்டது.எனினும் இவ்விரு மாகாணங்களும் தொடர்ந்து இணைந்து இருக்க வேண்டுமென்பதை தீர்மானிப்பதற்கு கருத்துக் கணிப்பொன்றை நடத்த வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ்.தளபதியின் அறிக்கையில் "பயங்கரவாதிகள்" சொற்பதம்

(கொழும்பு)

மீள் குடியேற்றம் தொடர்பாக யாழ்.குடாநாட்டுத் தளபதி சரத் பொன்சேகா தயாரித்த அறிக்கையில விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிய

புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்திற்கு சமனான அந்தஸ்தில் இருந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்திவரும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளெனச் சரத்பொன்சேகா குறிப்பிட்டிருந்ததே அவர்களைச் சீண்டிவிட்டதாகச்

# அரசு-புலிகள் பேச்சு

வருகிறது.

சமாதான முயற்சிகளின் பயனாக அவர்களைச் சீண்டிவிட்டதாகச்

(10ம். பக்கம் பார்க்க)

## தனிப் பிரதிநிதித்துவம் கோரி முஸ்லிம் மாணவர்கள் மறியல்!

(மட்டக்களப்பு)

முஸ்லிம் தலைவர்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமெனக் கோரியும், அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களின் போது முஸ்லிம்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் வழங்கக் கோரியும் தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க சகல அரசியல்வாதிகளும் ஒன்றிணைய வேண்டும்ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில்

(10ம்பக்கம் பார்க்க)

## 6ந் திகதி தாய்லாந்தில்

*அமைச்சர் குழு நாளை பிரதமருடன் சந்திப்பு*

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுககுமிடையே எதிர்வரும் 6ம் திகதி திங்கட்கிழமை தாய்லாந்தில் நடைபெறவுள்ள நான்காம் சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு அரசு பிரதிநிதிகள் குழுவொன்று நாளை சனிக்கிழமை தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ பிரதமரின் சமாதான செயலணிப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலகா ஆகியோரே சனிக்கிழமை தாய்லாந்துக்கு செல்லவுள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் சார்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதுகளான சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புத் தளபதி கருணா ஆகியோர் நாளை கிளிநொச்சியில் இருந்து கொழும்பு செல்லவுள்ளனர்.

அரசு சார்பில் செல்லும் அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் மக்கள் புலிகளுக்கு கட்டுப்பட வேண்டியவர்கள் அல்ல!

### அமைச்சர் ஹக்கீம் ராய்டருக்குப் பேட்டி



(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம்களுக்கு போதிய பங்களிப்பு வழங்கப்படல் வேண்டுமென்று முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும அமைச்சருமான ராவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ராய்டருக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப்புலிகள் ஒரு லடசம் முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றியிருந்தனர். இதனால் இரு சமூகங்களுக்கு மிடையிலான உறவுகள் பெரிதும் பாதிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் கூறிவந்தது போல் மூன்றாம் தரப்பினர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை விரும்பவில்லை.

(10ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன பெண் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் கடந்த மாதம் காணாமல் போன இளம் பெண் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மன்னார் வீதியைச் சேர்ந்த இந்த இளம் பெண் கடந்த மாதம் 27ம் திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற நபர் ஒருவர் இவரது சடலம் அழுகிய நிலையில் கிடப்பதைக் கண்டு பிடித்தார்.

அழுகிய நிலையில் 'காணப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவ தூதுக்குழு பேச்சில் பங்கேற்பது குறித்து பரிசீலனை

## இறுதி முடிவு பிரதமர் கைகளில் என்கிறார் பேர்ணாட் குணதிலக

(கொழும்பு)

**தாய்லாந்தில் இம் மாதம் 6 ஆம் திகதி தொடங்கவிருக்கும் நான்காவது சுற்று பேச்சுக்களில் இராணுவத் தூதுக்குழு ஒன்றும் பங்கு பற்ற வேண்டுமா என்பது பற்றி பிரதமர் நாடுதிரும்பியதும் முடிவு செய்யப்படும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சர்ச்சைக்குரிய விடயங்கள் ஆராயப்பட விருப்பதனால் இது பற்றி அவசரமாக முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது.**

சமாதானச் செயலக செயலர் பேர்ணாட் குணதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட அரசாங்கத்தின் பேச்சுவார்த்தை குழுவில் அங்கம் வகிக்கின்றார். ஆயினும், உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பாதுகாப்பு உபகுழுவின் விவகாரங்கள் விரிவாக பேசப்பட வேண்டியிருக்கின்றன. இதனை புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கமும் வெளிப்படுத்தியிருக்கிறார்: என்று பேர்ணாட் குணதிலக மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, தாய்லாந்துப் பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு விட்டதென்றும் அதில் உயர் பாதுகாப்பு வலயச் சர்ச்சை உள்ளடக்கப்பட்டிருக்கிறதென்றும் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமர்வு, மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்பான மூன்று அறிக்கைகள் பேச்சுக்களில் சமர்ப்பிக்கப்படும், மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, புலிகளின் தளபதி தீபன் ஆகியோர் இந்த அறிக்கைகளை தனித்தனியாக தயாரித்துள்ளனர்.

அன்ரன் பாலசிங்கம் டிசம்பர் 30 ஆம் திகதி தமிழ் நெற் மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; மீளக்குடியமர்வு விவகாரம் 4 ஆம்சுற்றில் விரிவாக ஆராயப்படும் என்றும் இராணுவம் கைப்பற்றிய தமிழரின் நிலங்களிலிருந்து இராணுவம் வெளியேற மறுக்குமாயின் உபகுழுக்களை வைத்திருப்பதில் அர்த்தமில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

கண்காணிப்புக் குழுஇராணுவத்தின் கொள்கைகளை ஆதரிப்பதை தவிர்க்க வேண்டும் எனபாலா அந்த அறிக்கையில் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

### பதிவு செய்க

2003 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களை பதிவு செய்யுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் கோரியுள்ளது. (உ-258)

### கிளி. வைத்தியசாலை சொந்த இடத்தில்

(அரியாலை)

இதுவரை அக்கராயன்குளத்தில் இயங்கி வந்தகிளிநொச்சி வைத்தியசாலை இம்மாதம் தொடக்கம்கிளிநொச்சிநகரின் பழைய இடத்தில்இயங்கஇருக்கின்றது. அழிந்துபோனமருத்துவ மனையின் ஒரு பகுதிபுனரமைக்கப்பட்டு அதில் இம் மருத்துவப் பணிகள் இடம் பெறவுள்ளன. (உ-225)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களின்பிரதிநிதிகளுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்றுநாளைசனிக்கிழமை பி.ப 3மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி பிரதேசசெயலர் திருமதி ஆர்.இரட்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் விளையாட்டுக் சழகங்களின் அனைத்துப் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களின் விளையாட்டுப்போட்டிகள்யாவும் மார்ச்மாதப்பிற்பகுதியில் நடைபெறவுள்ளன. (வ)

## பொன்னாலை உயர் பாதுகாப்பு வலயம்

# மீளக்குடியமர்வு கோரிக்கைக்கு சாதக பதில்

# சங்கானை மறியல் போர் இடைநிறுத்தம்

(தென்மராட்சி)

பொன்னாலை உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் உட்பட்டிருக்கும் பொன்னாலை, காட்டுப்புலம், பாண்டவெட்டை ஆகிய இடங்களில், 545 குடும்பங்கள் மீளக்குடியமரக் கூடிய சாத்தியம் தென்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பொன்னாலை மக்கள் ஒன்றியத்தினால் கடந்த நான்கு நாட்களாக வலிகாமம்மேற்கு சங்கானை பிரதேச செயலகம் முன்பாக நடத்தப்பட்டு வந்த மறியல் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

நேற்றையதினம் யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் செ. பத்மநாதன் பொன்னாலை மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகளுடனும், அப்பகுதி கிராமசேவையாளருடனும் மேற்கொண்ட சந்திப்பின் போது, 512 வது பிரிகேட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்புப் படையின் உயர் மட்ட மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட மூன்று விடயங்களை அரச அதிபர் சமர்ப்பித்தார்.

இதன் பிரகாரம் - மீளக் குடியமர விரும்பும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தல். தற்போதுள்ள கடற்படைமுன் அரணை பிரதான வீதியினுள் நகர்த்தல் இது ஒரு வாரத்துக்குள் நடைமுறைக்குவரல் கடற்றொழில் செய்பவர்களுக்கு கடலுக்குச் செல்வதற்கான விசேட பாதையை கடற்படையினருடன் கலந்தாலோசித்துச் செயற்படுத்தல் போன்றவை ஒப்புக் கொள்ளப்பட்ட பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும்அரச அதிபரால் கூறப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து மேற்படி விடயங்களை பாதுகாப்புப் படையினர் அமுலாக்கும் பட்சத்தில் புரிந்துணர்வுடன் தாம் செயல்பட்டு ஒத்துழைப்பு நல்கவும் பொன்னாலை மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகளான நா. பொன்ராசா ம. மதனமோகன், பொ. இராஜகுலேந்திரன், நா. இராஜேந்திரம்ஆகியோர் சம்மதம் தெரிவித்தனர்.

இதேவேளை, இம் மூன்று விடயங்களையும் அமுலாக்கம் செய்வதில் தாமதம், அல்லது இழுத்தடிப்புக்கள் மேற்கொள்ளப்படின் தமது மறியல் போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் ஒன்றியப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இது இவ்விதமிருக்க,யாழ். மாவட்ட அரச அதிபரின் பிரதிநிதிகள் இருவர் நேற்றைய தினம் சங்கானை பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்று வந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேரில் சந்தித்து அரச அதிபரால் தெரிவிக்கப்பட்ட விடயங்களைத்தெளிவுபடுத்தியுள்ளனர். இதனடிப்படையில் மறியல் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. (உ-77-7)

---

## யாழ்ப்பாணம்- மாநகரசபை

2003ம் ஆண்டுக்கான வியாபார

உத்தரவுப்பத்திரம், வாகன மிருகவரி

உயர்தொழில் மீதான வரி ஆகியவற்றிற்கான

# உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் உயர்தொழில் நிறுவனங்களும் வியாபாரவரியையும், உயர்தொழில் மீதானவரியையும், மிருக வாகனவரியையும்

**எதிர்வரும் 31-03-2003ந் திகதிக்கு**

முன் செலுத்தி அதற்கான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும். கடந்த ஆண்டுகளில் உரிய கட்டணங்களை செலுத்தாதவர்கள் இவ்வாண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்துதல் வேண்டும். குறித்த திகதியின்பின்னர் உத்தரவுப்பத்திரம் பெறத்தவறிபவர்கள் மீது சட்டநடவடிக்கைமேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

அத்துடன் வாகன மிருக உரிமத் தகடு பெறுபவர்கள் உரிமக்கட்டணம் ரூபா5/-உடன், விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 5/-வும் சேர்த்து மொத்தம்ரூபா 10/- செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**இ. இராமலிங்கம்**

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
2003-01-02.

(சி-5550)

---

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்வு

(கொழும்பு)

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தரப்பில் கடமையாற்றிய 7 பேரிற்கு முதலாம் திகதி தொடக்கம் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவி உயர்வுவழங்கியுள்ளது.

லயனல் குணதிலக்க கே. வி. ஜி. பத்திரன ஜயந்த பறணகல, அசோக ரத்தின சிர, ஜே. தங்கவேல், எம். விஜியசிங்கா, வி. பிறேமரத்ன ஆகியோரே பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். (உ-10)

### சவால்விடும்

னிப் படகுச்சேவை சவாலை எதிர்கொண்டுள்ளது.

இதேவேளை, இவ் அத்துமீறிய செயலினால் தீவக மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் நாசமாக்கப்படுவதுடன் அவர்களின் பொருளாதாரம் கேள்விக் குள்ளாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது (உ-43)

### ஆலயத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை ஸ்ரீ அங்குசபாச பிள்ளையார் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு பெருந்தொகைப் பணம் களவாடப்பட்டுள்ளதுடன், கோயில் சொத்துக்கள் வேறு பலவும் திருட்டுப் போயுள்ளன. (உ)

## இராசி பலன்

3 1.2003
(மார்கழி 19,வெள்ளி)
பிரதமை பி.இ 1.35வரை
பூராடம் பி.ப5.46வரை

**மேடம்**
கட்டுப்பாடு, அச்சமான நிலை,முயற்சிமந்தம், பிரயாணம்

**இடபம்**
தொழில்கஷ்டம், உடல் நலக்குறைவு, பகைவர்நேசம், முயற்சிதாமதம்

**மிதுனம்**
காரிய சித்தி,தெய்வசிந்தை களஸ்திரசுகம்,நல்லசெய்தி

**கடகம்**
பெரியோர் சந்திப்பு, ஆரோக்கியம்,முயற்சிபலிதம், தொழில் விருத்தி

**சிங்கம்**
அதிகாரம், உஷ்ணவியாதி சொத்துப்பிணக்கு,முயற்சிகைகூடும்

**கன்னி**
மனச்சஞ்சலம், கௌரவக் குறைவு, காரியதாமதம், அற்பர்உறவு

**துலாம்**
வாக்குமேன்மை, நல்லசம்பவம்,காரிய அனுகூலம், தனவரவு

**விருச்சிகம்**
தெய்வசிந்தை, வீண்விவாதம், சயனசுகக்குறைவு, தனவிரயம்

**தனுசு**
நண்பர்கள்உதவி, ஜனவசியம்,சயனசுகம், போசனசுகம்

**மகரம்**
காரிய அலைச்சல்,சுபசெலவு எதிர்பாராத நன்மை, கோபப்படுதல்

**கும்பம்**
தெய்வதரிசனம், பெரியோர் ஆதரவு, மனமகிழ்ச்சி, காரிய நன்மை

**மீனம்**
நிலைமாற்றம், கடின உழைப்பு, நல்லசெய்தி, முயற்சி கைகூடும்

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

[வளவன்

# இறியூனியன் தமிழர்களிடையில் ஏற்பட்டு வருகின்ற புதிய எழுச்சிக்கு உலகத்தமிழா உதவ வேண்டும்

**1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழகத் தலைநகரான சென்னையில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இறியூனியன் தீவுத் தமிழரான வீ.தேவகுமாரன் குரும்பசிட்டி இரா.கனகரத்தினத்துடன் கலந்துரையாடிய பொது இறியூனியன் தமிழர் நிலை பற்றிக் கூறிய குறிப்புக்களிலிருந்து தொகுக்கப்பட்டது.**

இறியூனியன் தீவைச் சேர்ந்தவன் நான் பெயர் வீ. தேவகுமாரன் பாரிஸ் நகரில் பல்கலைக்கழகத்தில் அரசியற்துறையில் ஆய்வு செய்து கொண்டு துணைப் பேராசிரியராகவும் இருந்து வருகிறேன். இன்னும்திருமணம் ஆகவில்லை. தமிழ்ப் பெண்ணைத் தான்மணம்செய்ய வேண்டும் என்பது எனதுஆசை.எந்த நாட்டுப் பெண்ணாக இருந்தாலும் சரி, தமிழ் உணர்ச்சி, தமிழ் பண்பாடு உள்ள பெண்ணாக இருக்க வேண்டும். இறியூனியன் நாட்டுத் தமிழர்கள் பற்றியும் அவர்களின் நிலை பற்றியும் தமிழக மக்களுக்கும், உலகத் தமிழர் பிரதிநிதிகளுக்கும் விளக்க வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடனேயே உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்க முதலாவது மாநாட்டில் பங்குபற்றத் தமி ழகம் வந்துள்ளேன்.

### தமிழக நிலைமை

தமிழகத்தைப் பற்றியும் தமிழர் கலைப் பற்றியும் மனத்தில் சில கற்பனை உருவம் பதிந்திருந்த எனக்குஇங்கு வந்து நேரடியாகப் பார்க்கும் போது, இது பிச்சைக்காரர்கள் வாழும் நாடோ என எண்ணுமளவுக்குப் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பதை காண்கின்றேன். இங்குள்ள தமிழர்களி டையே தமிழார்வம், தமிழ் இன உணர்வு இருக்கிறதா? எனச் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத் தமிழர்கள் பற்றி வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வைத்திருக்கும் உயர்ந்த எண்ணங்கள் தவறானவை என்பதை இங்கு ஒரு தடவை வந்தபின் எவரும் இலகுவாகக் கண்டு கொள்ள முடியும். இருப்பினும் கடல் கடந்த நாடுகளை தாயகமாக்கிக் கொண்டு விட்ட தமிழர் கள் தமிழ் நாட்டுக்கு ஒரு தடவை வந்து செல்ல வேண்டும்.மாமல்லபுரம் போன்ற கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் இடங்களைப் பார்த்துச் செல்வதன் மூலம் அன்றைய தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

### கல்வியும் தொழிலும்

இறியூனியன் தீவில் ஏறக்குறைய ஐந்தரை லட்சம் மக்கள் உள்ளனர். பெரும்பான்மையோர் கிரியோல் மொழி பேசுபவர்கள் இவர்கள் தொகை இரண்டரை லட்சம் இவர்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏனைய இன மக்களுக்கும் பிறந்தவர் களின் சந்ததியினர் தமிழர்கள்.ஏறத்தாழ ஒன்றரை லட்சம் பேர் சீனமக்கள், ஆபிரிக்கர்கள்,வடஇந்திய முஸ்லிம்கள் இவர்கள் ஏனைய இனத்தவர்கள். தமிழர்களுள் கணிசமான இவர்கள் இன்னும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள்.பலர் பாரிஸ் சென்று படித்து விட்டு வந்து ஆசிரியா களாக,டாக்டர்களாக, வக்கீல்களாக தொழில் பார்க்கிறார்கள். குறிப்பாக தமிழர்களிடையே வக்கீல்கள் அதிகப்பேர் உண்டு. இவர்களுள் கிருஸ்ணன் என்பவர் குறிப்பிடக்கூடியவர். வீரப்பிள்ளை என்பவர் வக்கீலாக இருந்து விட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். தமிழ் மொழி தெரிந்த தமிழர்கள் மிகக் குறைவு. தமிழர்கள் கிரியோல் மொழி தான் பேசுகிறார்கள். தமிழ்ப்பாட சாலைகள் கிடையாது: தமிழ்சினிமா பார்ப்பதே மிகக்கடினம்.தமிழ்சினிமா பார்ப்பதாயின் பக்கத்து நாடான மொரி சியசு தொலைக்காட்சி மூலம் தான் பார்க்க முடியும். தமிழ்க்கலை நிகழ்ச்சி கள் நடைபெறுவதில்லை. இப்போது இறியூனியன் தமிழ்ப் பெண் ஒருவர் மொரிசியசு சென்று பரதநாட்டியம் பயின்று விட்டு வந்து கலைநிகழ்ச்சி களை நடத்தி வருகிறார். தமிழ் மொழி தமிழர் நிலை என்று பார்ப்போமே யானால் மொரிசியசு நாட்டை விட மிகவும் பின்தங்கிய மிகப்பரிதாபமான நிலையில் நாமுள்ளோம்.

### எனது தமிழறிவு

நான் தமிழை நல்ல முறையில் பேசுவ தாக நினைக்கவில்லை.என்னைப் பொறுத்த வரை நான் தமிழ் கற்றுக் கொண்டதே பாரிஸில் தான். தமிழ் பாடல்கள் என்றால எனக்கு உயிர். புதுவையிலிருந்து ஏராளமான தமிழர்கள் பாரிசுக்கு வருகிறார்கள். இவர்கள் மூலமும் நண்பர்கள் மூலமும் தமிழ்ப் படங்களை பார்ப்பதன் மூலமும் ஓரள்வு தமிழைக்கற்றுக் கொண்டேன். தமிழ் எனது தாய் மொழி எனவே அதை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனது இலட்சியம்.

### அரசியல்

இறியூனியனின ஆட்சி முறை கட்சிகளின நிலை அரசியலில் தமிழர்வகிக்கும் பங்கு பற்றி சிறிது விளக்கம் தரவேண்டியுள்ளது. முதலாவதாக ஒன்றை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இறியூனியன் பிரெஞ்சு நாட்டின் ஒரு மாவட்டம் போல அரசியலில் இருந்து வருகிறது. பிரெஞ்சு நாட்டில் எப்படி ஜனநாயகம் செயற்படு கிறதோ அப்படியே இறியூனியனிலும் செயற்படுகிறது. ஒரு பிரெஞ்சு நாட்டுக் குடிமகனுக்கு என்னென்ன உரிமைகள் அந்த நாட்டில் உண்டோ அத்தனை யும் எமக்கும் உண்டு- வாக்குரிமை உட்பட. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இறியூனியன் மக்களை அவர்கள் இம்சைப்படுத்து வதில்லை. முக்கியமாகப் பிரெஞ்சு மக்கள் ஜனநாயக உரிமைகளுக் காக போராடும் உணர்வு கொண்டவர் கள்.ஜனநாயகத் துக்காகப் போராடி அந்நாட்டு அரசனின் தலையையே வெட்டி வீழ்த்தியவர்கள். எனவே அவர்களின் ஆட்சியின் கீழ் எமக்கு அதிக பிரச்சினை கள் இல்லை. பிரெஞ்சு நாட்டில் எந்தெந்தக கட்சிகள் உண்டோ அத்தனையும் இறியூனியனி லும் உண்டு. ஆளும் கட்சியில் தமிழர்கள் குறைவு. ஆனால் தொழிற்கட்சி, சோசலிசக்கட்சிகளில் ஏராளமான தமிழர்கள் உண்டு. உதாரணமாக

**வீ.தேவகுமாரன்**
**இறியூனியன் தீவு**

தொழிற்கட்சியின் பொதுச் செயலாள ரோடு ஒரு தமிழர்தான் பெயர் பொன்னம்மா பிரெஞ்சு நாடு பல்லா யிரம் மைல்களுக்கப்பால் இருக்க இறியூனியன் தீவு அந்த நாட்டின் ஒரு மாவட்டம் போல நிர்வகிக்கப் படுகிறது என முன்பே கூறினேன். எனவே இங்கு பிரதமரோ, ஜனாதிபதியோ கிடையாது. கவர்னர் ஒருவர் உண்டு. இவர் பிரெஞ்சு நாட்டுக்காரர் மூன்று உறுப் பினர் கள்(M.P)தெரிவு செய்யப்பட்டு பிரெஞ்சு நாட்டுக்கு அனுப்பப்படுகிறார் கள். இந்த மூன்று சட்டசபை உறுப் பினர்களும் இறியூனியனைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறார்கள்.இந்த மூவருள் ஒருவர் தமிழர். நான் முன்பு குறிப்பிட்ட பிரபல வக்கீலான வீரப்பிள்ளை என்பவராகும். தமிழ் பேச அவரால் முடியாது.தமிழ் உணர்வு, தமிழின உணர்வு உண்டா என்பது தெரிய வில்லை. ஆனால் தமிழர்கள் அவரை அணுகினால் உதவுவார்.

### தமிழர்களும் வழிபாடும்

பொதுவாகத் தீவின் பல பகுதிகளிலும் தமிழர்கள் பரந்து வாழ்கிறார்கள். சிறப்பாகக் குறிப்பிடவேண்டுமாயின் தலைநகர் சென் அந்தனி, தலைநகரை அடுத்த நகரான சென்ட் போல், சென்ட் கிளேயர். இப்படிப் பல பகுதிகளில் நெருக்கமாக வாழ்கிறார்கள். சிறப்புக்குரிய ஒரு அம்சம் என்ன வெனில் மொரிசியசு நாட்டில் தமிழர் மட்டுமல்ல வட இந்தியரும் வாழ்கிறார்கள். ஆனால் இறியூனியனில் வட இந்தியர் கிடையவே கிடையாது. முழுக்க முழுக்கத் தமிழர்களே வாழ்கிறார்கள்.

இந்துக்கோவில்களுக்கு மட்டும் ஒன்றும் குறைவு இல்லை. தமிழர் வாழும் பகுதிகள் எல்லாம் சிவன், முருகன், காளிகோவில்கள் என நிறைய உண்டு. பிரெஞ்சுமொழியில் தான் மிக அண்மைக் காலம் வரை பூசைகள் நடைபெற்றன. தற்போது மொரிசியஸி லிருந்து பூசாரிகளைத் தருவித்துத் தமிழ் மூலம் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

மொரிசியஸில் போன்று தமிழ் ஏடுகள் ஏதாவது எங்கள் நாட்டில் வெளிவந்ததாகத் தகவல் இல்லை. இப்போதும் கிடையாது. ஆங்கிலம் பிரெஞ்சு மொழிகளில் தான் பத்திரி கைகள் வெளிவருகின்றன. பெரும் பான்மையான இறியூனியன் தமிழர்களுக் குத் தமிழும் தெரியாது. ஆங்கிலமும் தெரியாது. பிரெஞ்சு மொழிமூலம் வரும் பத்திரிகைகளையே படித்து உலகச் செய்திகளை அறிந்து கொள் கிறார்கள். தமிழ்மொழியை தமிழர் பண்பாட்டைப் பரப்ப வேண்டும். இறியூனியனில் தமிழை வாழ வைக்கவேண்டும் என்ற ஆர்வம் கொண்ட துடிப்புமிக்க இளைஞர்களால் பிரெஞ்சுமொழியில் வெளியான தமிழ் ஏடு ஆரம்பிக்கப்பட்டது. பல காரணங் களால் வெளிவராமல், நின்றுவிட்டது. மீண்டும் இதனை வெளிக்கொணர முயற்சிகள் நடைபெறுகின்றன.

### பெயர்வைத்தல்

இறியூனியன் தீவுத் தமிழர்கள் தொடர்ந் தும் தமிழ்ப் பெயர்களையே வைத்துக் கொண்டு வருகிறார்கள், உதாரண மாக சட்டப்பிள்ளை, அப்பாவு, கிருஷ்ணன், ஜெயபாலன் என்பன. தமிழார்வம் மிக்கவர்கள் தனித்தமிழிலும் பெயர் களை வைக்க ஆரம்பித்திருக்கின்றனர். காலனித்துவ ஆட்சியின் ஆரம்பகாலத் தில் இத்தீவுக்குக் குடியேறிய தமிழர்கள் கிறிஸ்தவ சமயத்தில் சேரப் பல வகைகளிலும் நிர்ப்பந்திக்கப்பட்ட னர். உதாரணமாக வேலைதேவையா யின் அவர்கள் கிறிஸ்தவர்களாக மாற வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. இந்த நிர்ப்பந்தத்தின் காரணமாகப் புற வாழ்க்கையில் கிறிஸ்தவர்களாகவும் அகவாழ்க்கையில் இந்துக்களாகவும் இவர்கள் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று இறியூனியனில் இந்துக்கள் என்று எவரும் இல்லை. கிறிஸ்த வர்களாக உள்ள இத்தமிழர்கள் இந்துக்களாகவும் வாழ்ந்துகொண்டு வீட்டில் தமிழ்ப்பெயர் வெளியில் கிறிஸ் தவப் பெயர் என வாழ்க்கை நடத்து கிறார்கள். உதாரணமாக ஜீனத் என்ற பெயர் கொண்ட தமிழ்ப் பெண், வீட்டில் காமாட்சி, மீனா, மைனா வதி போன்ற பெயர்களில் ஒன்றால் அழைக்கப்படு கிறார். நீண்டகாலமாக இந்த இரட்டை வாழ்க்கையில் ஊறிப் போய்விட்டதால் நீண்டகவுண்களை அணிந்து கொண்டு, கோவில்களுக்கு வந்து முழந்தாளில் நின்று வணங்கும் பெண்களை இறியூனி யனில் சர்வசாதாரணமாகப் பார்க்கலாம், ஆனால் இப்பொழுது புடைவை கட்டும் பழக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறது. தவிர பொங்கல், தீபாவளி, புதுவருடக் கொண்டாட்டம் எல்லாம் உண்டு. தீமிதிப்பு, விரதம் இவைகளும் அனுஷ்டிக்கப்படுகின்றன. பொருளாதாரத் துறையில் நல்ல நிலையில் இருந்து வரும் இறியூனியன் மக்கள் பிரெஞ்சு நாட்டுமக்கள் போல் எல்லா வசதி களும் பெற்று வாழ்கிறார்கள்

### பிற்போக்குக் கொள்கைகள்

தமிழ் நாட்டின் ஏழ்மை நிலையைப் பற்றிய பத்திரிகை வாயிலாக நிறைய அறிந்து வைத்திருக்கும் எமது மக் களில் நூற்றுக்குப் பத்துப் பேர் கூடத் தமிழகம் திரும்பிவர வேண்டும் என்று சிந்திக்க மாட்டார்கள்,மேலும் தமிழகத்தில் காணப்படும் படுமோசமான பிற்போக்குக் கொள்கைகள் எமது நாட்டில் இல்லை. உதாரணமாக, சாதிப்பாகு பாடுபற்றி எமது மக்களுக்கு எதுவுமே தெரியாது. ஒரு தமிழன் ஒரு தமிழிச்சியை மணஞ் செய்வதை எப்படிக் கலப்புத்திருமணம் என்று கூறுகிறார்களோ எனக்கு வியப் பாகவும் மறுப்பக்கம் சிரிப்பாகவும் இருக் கிறது. இதற்குப் பரிசுவேறு கொடுக்கிறார் களாம், ஒரு பிரெஞ்சு மகன் ஒரு தமிழ்ப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், அதனை வேண்டுமா னால் ஒரு கலப்புத்திருமணம் என்று கூறிக் கொள்ளலாம், எமது மக்கள் இது போன்ற ஏராளமான பிற்போக்குக் கொள்கைகளை தமிழ் நாட்டுக்குவந்து அறிந்து கொண்டு புகுந்த நாட்டிலும் சென்று கைக் கொள்வதை நான் மிகவும் வன்மையாக எதிர்க்கிறேன். வேண்டு மானால் இன்னும் ஐம்பது ஆண்டுகள் கழித்து நாம் எதிர்பார்ப்பது போல் தமிழகம் இந்தத் தளைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டபின் வேண்டு மானால் தமிழகம் வந்துசெல்லட்டும், அதுவரை இங்கிருந்து தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள், பாடகர்கள், பரதக் கலைஞர்கள் போன் றோர் அங்கு சென்று மொழி, கலை, பண்பாட்டுத் துறைகளில் புத்தெழுச்சியை ஏற்படுத்தட்டும் ஏற்படுத்தவேண்டும் என்பது எனது அவா வாகும். நான் ஆரம்பத்தில் கூறியது போல் பண்டையதமிழன் எப்படி வாழ்ந்தான் என்பதைப் பார்க்க விரும்புவர்கள் மட்டும் தாரளமாக வந்து செல்லலாம்.

### உதவிகள் தேவை

எங்கள் தமிழர்களுக்கு மொழி, கலை, பண்பாட்டுத் துறைகளில் புதிய விழிப்பை ஏற்படுத்த இங்குளளவாகள் உதவுவார்களானால், அதைவரவேற் கப்பலர் காத்திருக்கிறார்கள், இறியூனியன் தமிழர்கள் மத்தியில் இப்போது புதிய தொரு எழுச்சி ஏற்பட்டுவருகிறது. தமிழ்த்திரைப் படங்களைப் பார்க்க மக்கள் ஆவலாக இருக்கிறார்கள், வாய்ப்பு இல்லை. இதைநன்கு பயன்படுத்த வேண்டும், நல்ல தமிழ் நூல்களை, தமிழ் ஆசிரியர்களை, கலைஞர்களை உலகத்தமிழர் அமைப்புகளும், தமிழக அரசும்அனுப்பி உதவவேண்டும் என எதிர் பார்க்கிறோம்.

இலண்டனில் ஏராளமான தமிழர்கள் வாழ்கிறார்கள் இலண்டன் முரசு நிறையத் தமிழ்ப் பணி புரிகிறது, சூரினாம் என்பதும் ஒரு பிரெஞ்சுக் குடியேற்றநாடு. எமது நாட்டுத் தமிழர்கள் போல், அவர்களும் தமிழ்ப்பெயர்களை வைத்துக் கொண்டிருக் கிறார்கள், மற்றப்படி அவர்களுக்கும் தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாட்டுக்கும் தொடர்புசற்றும் இல்லை, தமிழர்களி டையே ஒரு பெரியகுறை! மிகமிக அழகாகப் பேசுகிறார்கள். துடிப்பாகச் செயலாற்று வதில்லை.

அறிஞர் அண்ணா கூறியது போல, தமிழ்மொழி வளர்ச்சிக்கு, தமிழர் நல்வாழ் வுக்கு விரோதமாக எவர் இருக்கிறார் களோ அவர்கள் தமிழர்களாக இருப்பினும் சரி, அல்லது எந்த இனமக்களாக இருப் பினும் சரி அவர்கள் நம் விரோதிகளே! தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்கள் என்பது முக்கியமல்ல. தமிழர்கள் தம் உரிமைகளைப் பேண எங்கெங்கு உரிமைப் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதே முக்கியம். இலங்கைத்தமிழர்கள் பற்றி இன்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது. எழுதப்படுகிறதென்றால் அவர்கள் போராடி வருவதால்தான்! படித்தவர்கள் அரசியலில் இறங்கப் பின்வாங்குவ தால் தான் தமிழ் நாட்டிலும் சரி, உலகநாடுகளிலும், தமிழன் நிலை கேவலமாக இருக்கிறது. எந்தக் கட்சியில் தமிழர்கள் இருப்பினும் சரி - தமிழ் மொழி வளர்ச்சிக்கு, தமிழின வளர்ச்சிக்குப் போராட வேண்டும்.

உலகத்தமிழர்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள ஒருவருக்கொருவர் உதவ, சந்தித்து அளவளாவ உலகத் தமிழ்ப் பண் பாட்டு இயக்கம் போன்ற அமைப்புக்கள் செயற்படவேண்டும், பேசுவதைக் குறைத்துச் செயலில் இறங்க வேண்டும்.

தொகுப்பு~மதிவாணர்

## கண்ணிவெடிகள் மீட்பு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் தட்டாதெருச்சந்திப் படையினர் முகாம் அமைந்திருந்த பகுதியில் அண்மையில் 20 வரை யான கண்ணிவெடிகள் அகற்றப் பட்டதாக படைத்தரப்பினர் தெரி வித்தனர். (உ-43)

## கலந்துரையாடல்

(ஆனைக்கோட்டை)

ஜப்பானில் கராத்தே பயிற்சி பெற விருப்பமுடையவர்களுக்கான கலந்துரை யாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு திருநெல்வெலி வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-201)

## மகளிர் ஆச்சிரமம் இயங்குகிறது

(அரியாலை)

கொழும்புத்துறை யோகர் சுவாமி மகளிர் ஆச்சிரமம் இயங்கத் தொடங்கி யுள்ளது.

மீசாலை காயத்திரி பீட சுவாமிகள் பொறுப்பேற்று நடத்தும் இந்த ஆச்சிரமத்தில் 24 பெண் பிள்ளைகள் தங்கிக் கல்வி பயில்கின்றனர்.

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ் ஆச்சிரமம் இயங்குவதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளார். (உ-225)


**கடந்த ஞாயிறு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்ற முன்னாள் 'ஈழநாடு' ஆசிரியர் எஸ்.பெருமாள் எழுதிய பத்திரிகைத்துறை சில நினைவுக்குறிப்புகள் என்ற நூல் வெளியீட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள்.**




தலைமையுரை நிகழ்த்தும் மயிலங்கூடலூர் நடராஜன். வரவேற்புரை வழங்கும் இளைப்பாறிய அதிபர் கே.கனேசலிங்கம்.




ஆய்வுரை வழங்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.கோகிலா மகேந்திரன், இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் செல்லத்துரை.



முதல்பிரதியை மாகாண இணைப்பாளர் கலாநிதி குணராசாவிடமிருந்து வேலணை மருத்துவர் எஸ். சற்குருநாதன் பெற்றுக்கொள்கின்றார்.





மாகாண இணைப்பாளர் கலாநிதி க.குணராசா வெளியீட்டுரை நிகழ்த்துகிறார். பதிலுரை வழங்குகிறார் நூலாசிரியர் எஸ்.பெருமாள்.


# விடைபெறும் 2002




சமாதானப் பயணத்தில் பிரதமரின் யாழ்.வருகை



வளம் கொழித்த பூமி அழிந்தொழிந்த காட்சி







வெற்றி நமதே



அரசியல் பணிகள் மீண்டும் ஆரம்பம்.

# இன்று ஒரு தகவல்

## அறியாமை தரும் சுகம்

இந்த உலகத்தில் உண்மையாகவே வேதாந்தம் பேசுகிறவர்களும் உண்டு. உள்ளே வேறு மாதிரி இருந்து கொண்டு வேதாந்தம் பேசுகிறவர்களும் உண்டு. ஒரு ஆள் இருந்தான். அவன் ஒரு கடை வைத்து வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தான். மகா கஞ்சன், யாருக்கும் எந்த உதவியையும் செய்ய மாட்டான். எச்சில் கை என்ன... ஈரக்கையைக் கூட உதறமாட்டான். அப்படிப்பட்ட மனிதன்.

அந்த ஊருக்கு ஒரு முனிவர் வந்து கொண்டிருந்தார். வருஷத்து ஒரு தடவை வருவார். ஒரு நாள், இரண்டு நாள் இருப்பார்... பின்னர் போய் விடுவார். அந்த முனிவர் வருகின்ற போது எல்லாம் இந்த ஆள் எழுந்து ஓடிப் போய் அவரை வரவேற்பான். மிகப் பெரிய வேதாந்திமாதிரி அவரிடம் பேசிக் கொண்டிருப்பான். 'காயமே இது பொய் வெறும் காற்றடைத் தபை' என்பான். 'தர்மம் தலை காக்கும்' என்பான். 'பணம் என்ன சார் பணம்... இன்றைக்கு ஒருவன் கையில் இருக்கும். நாளைக்கு இன்னொருவன் கையிலிருக்கும். எல்லாம் மாயம். எனக்குத்தான் இன்னமும் இந்தச் சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு நேரம் வரவில்லை' என்பான்.

அந்த முனிவர், இந்த ஆள் இப்படிச் சொல்வதைக்கேட்டவுடனே, 'ஏனப்பா அப்படிச் சொல்கிறாய்? இப்பொழுது கூட நீ சரி என்று சொல்... உனக்குத் தீட்சை கொடுத்து இதிலிருந்துவிடுபடுகிற ஞானத்தைப் போதிக்கிறேன்' என்பார். உடனே அந்த ஆள் என்ன சொல்லுவான் தெரியுமா? 'ஐயோ சாமி... இப்பொழுது அது எப்படி முடியும்? பிள்ளைகள் எல்லாரும் சின்னஞ் சிறுசுகள் அவர்களுக்கெல்லாம் ஒரு கல்யாணம் காட்சி என்று செய்து கடமையை முடித்து விட்டால்... நீங்கள் சொல்கிறபடி செய்து விடலாம்' என்பான்.

'சரி' என்று சொல்லி விட்டு முனிவர் போய் விடுவார் அடுத்த வருஷம் வருவார். இவன் வழக்கம்போல்வேதாந்தம் பேசுவான். சரி... தீட்சை கொடுக்கிறேன் வா' என்றால்... பேரன், பேத்தியைப் பார்க்க வேண்டு'. கோட்டில் வழக்கு ஒன்று இருக்கிறது... அது முடியவேண்டும்' என்று தயங்க ஆரம்பித்து விடுவான். எல்லாம்சொல்லுவான் குடிப்பதற்குத் தண்ணீர் கூடத் தரமாட்டான்.

பலவருடங்கள் கழித்து மறுபடியும் ஒருநாள் அந்த ஊருக்கு முனிவர் வந்தார். இவனின்கடைக்கும் வந்தார். அங்கே நமது ஆள் இல்லை. அவனுடைய பிள்ளைதான் உட்கார்ந்திருந்தான். அப்பாவைப் போலவே பிள்ளையும் எழுந்து ஓடி வந்து முனிவரை வரவேற்றான். 'அப்பா எங்கே' என்று கேட்டார் முனிவர்.

'ஐயோ! அதை ஏன்கேட்கிறீர்கள் சாமி! உங்களிடம் தீட்சை வாங்கி இந்த சம்சார பந்தத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். அதுநிறைவேறாமலே போய்ச் சேர்ந்து விட்டார். போனமாதம் ஒருநாள் திடீரென்று நெஞ்சுவலிக்கிறதென்று சொன்னார். அவ்வளவுதான 'பொட்டென்று போய் விட்டார்' என்று புலம்பினான் பையன்.

இதைக் கேட்டதும் முனிவர் சிரித்தார். 'அவன் எங்கேயடா போவான்? உன் அப்பன் எங்கேயும் போகவில்லை! இதோவாலை ஆட்டிக் கொண்டு உன் காலடியிலேயே இருக்கிறான் பார்' என்று சொல்லிஅங்கே நின்று கொண்டிருந்த ஒரு நாயைக் காட்டினார். 'என்ன சாமி சொல்கிறீர்கள்?' என்று ஆச்சரியமாகக்கேட்டான் பையன் உடனே முனிவர் அந்த நாயினுடைய தலையிலே தட்டிப் 'பேசடா' என்றுசொன்னார் உடனே அந்தநாய் வேதாந்தம் பேச ஆரம்பித்து விட்டது. 'காயமே இது பொய் வெறும் காற்றடைத் தபை' என்று சொன்னது முனிவர் 'அடேய்! இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீ விரும்பினால் சொல்... உனக்குத் தீட்சை கொடுத்து என் பின்னே அழைத்துக்கொண்டு போய் உனக்கு ஞானத்தைப் போதிக்கின்றேன், வருகிறாயா?' என்றார். உடனே அந்த நாய் ஐயோ, அதை ஏன் கேட்கிறீர்கள் சாமி! நான் உண்ணாமல் கொள்ளாமல் ஏராளமாகச் சொத்து சேர்த்து வைத்து விட்டேன என் பிள்ளைகள் அதனுடைய பெருமை தெரியாமல் இரவில் கதவைத் திறந்து போட்டு விட்டு தூங்கி விடுவார்கள். அதனால் இப்படி நாயாகப் பிறந்து, இரவு பகலாகச் சுற்றிச் சுற்றிவந்து காவல் காத்துக் கொண்டிருக்கிறேன் இப்பொழுது எப்படி சாமி வரமுடியும?' என்று கேட்டதாம.

'அறியாமையில் சுகம்கண்டு இப்படியிருக்கிறது ஆட்களுக்கு எப்படி விடுதலை கிடைக்கும்? எப்போது விடுதலை கிடைக்கும்? ' என்று கேட்கிறார் தசாவதானி திருக்குறள்.பெ. இராமையா அவர் கேட்பது நியாயந்தானே!

இந்தக் காலத்துப் பையன் ஒருவன் அப்பாவிடம், 'அப்பா! இன்றைக்கு நான் ஒரு ரூபாய் மிச்சம் பிடித்துள்ளேன' என்று சொன்னான் 'அப்படியா, என்ன பண்ணினாய்? 'என்று கேட்டார் அப்பா-'டவுண டஸ்சில் ஏறமல் அதன் பின்னாலேயே ஓடி வந்தேன். ஒரு ரூபாய் மிச்சம 'என்றான் பையன். 'அடப்பாவி! ஒரு ஆட்டோ பின்னால் ஓடிவந்திருந்தால் பத்து ரூபாய் மிச்சமாகியிருக்குமே! வீணாக்கி விட்டாயே' என்றானாம் அப்பன்.

சு. சிவபாதசுந்தரனார்

## வீடுகள் தரைமட்டம் மீளக்குடியமர வந்தமக்கள் பாடசாலையில் தஞ்சம்

(காரைநகர்)

கரைச்சிவேரவில் பிரதேசத்தில்இருந்து காரைநகர் தோப்புக் காட்டுப்பகுதியில் மீளக்குடியமர வந்தவர்கள் 5 குடும்பங்கள் தோப்புக்காடு பாடசாலையில் தங்கியுள்ளனர்.

மீளக்குடியமர வருகைதந்த பாதும் வீடுகள் இல்லாத ரணத்தாலேயே இவ் 5 குடும்பங்களையும் சேர்ந்த 35 பேரும் பாடசாலையில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்களின் நிலைமையை தீவகம் வடக்கு பிரதேசசெயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார். (உ-246)

# தாமதமாய் கடமைக்குச் செல்லும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை

## உள்ளூராட்சி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களை சேர்ந்த உயர் அதிகாரிகள் காலை 9 மணிக்கு முதல் வேலைக்கு சமுகமளிக்க வேண்டும் என்றுஉள்நாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாணசபைஅமைச்சர் அலுக் அலு விகாரகடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விசாரணைப் பிரிவினர்-நடத்திய சோதனையில் உயர் அதிகாரிகள் உரிய நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிப்பது இல்லை என தெரிய வந்துள்ளது.

இதனையடுத்தே இக்கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளதாக அமைச்சர் அலுக் அலுவிகார சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்துவெளியிடுகையில்; அதிகாரிகள் இவ்வாறு உரிய நேரத்தில் கடமைக்கு திரும்பாதமை மக்களையே பாதிக்கிறது.

அது மட்டும் மன்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பில் இயங்கும் ஏனைய உத்தியோகத்தர்களும் இத்தகைய தவறானவழிமுறையைப் பின்பற்றுகிறார்கள்.

இதனால் அலுவலகக் கடமைகள் பெரிதும்பாதிக்கப்படுகின்றன.

எனவே உரிய நேரத்திற்கு கடமைக்குசமுகமளிக்காதஅதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ-10)

## சேமிப்பு கணக்குகளுக்கு வரி அறவீடு அமுல்

(கொழும்பு)

தீர்வை முறையின் நிர்வாகத்திற்கான திருத்தங்கள் இம்மாதம் தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளமையினை அடுத்து வர்த்தக வங்கிகளில் பேணப்படும் சேமிப்புக் கணக்குகளுக்கு வரி அறவிடப் படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், நிதி நிறுவனங்கள் என்பவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக 10 சதவீதவரி விதிக்கப் பட்டுள்ளது.

முன்னர் இந்தவரி நடைமுறைக் கணக்குகளிற்கு மாத்திரமே அமுல் செய்யப் பட்டமைகுறிப் பிடத்தக்கது (உ -10)

## குமுதினிப் படகுச்சேவை சவால்விடுக்கும் இந்திய மீனவர்களின் படகுகள்

(திருநெல்வேலி)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான குமுதினிப் படகுச்சேவைக்கு இடையூறு ஏற்படுத்தும்விதத்தில் இந்தியமீனவர்கள செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் நூற்றுக்கணக்கான இந்திய மீன்பிடிப் படகுகளினாலேயே குமுதி

(2-ம் பக்கம் பார்க்க)

## துறைமுக அபிவிருத்தி நடவடிக்கை விஸ்தரிப்பு

(கொழும்பு)

துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகள் இவ்வாண்டில் மேலும் விஸ்தரிக்கப் படவுள்ளதாக துறைமுக அபிவிருத்திஅமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை வருமானவரியாக அரசாங்கத்திற்கு செலுத்தும் பணத்தை துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்த தாம் எண்ணியுள்ளதாகவும்,

தெற்காசிய தனியார் நிறுவனம்ஒன்றுடன் போட்டி போடவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் நஷ்டம்அடையாமல்இருப்பதுகுறித்து அவதானமாக இருக்கவேண்டும் என்றும் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## விளையாட்டு சட்டம் திருத்தியமைக்கப்படும் அமைச்சர்ஜோன்சன் தகவல்

(கொழும்பு)

விளையாட்டு தொடர்பான சட்டம் திருத்தி அமைக்கப் படவிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும் சில ஆலோசனைகளை முன்வைத்துள்ள தாக தெரிவித்துள்ளஅமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ இதுதொடர்பானஉத்தேச திருத்தங்கள் பற்றி பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் இவ்வாண்டு விளையாட்டுத்துறை சம்பந்தப் பட்டவர்களினதும், பயிற்றுவிப்பாளர்களினதும் ஆண்டாக பிரகடனப் படுத்தப் படும் என்றும் குறிப்பிட்டார்.

அதேசமயம் சுயாதீனமான விளையாட்டு அதிகார சபை விரைவில்அமைக்கப்படவிருப்பதால் இத்துறையில் மறுமலர்ச்சி ஏற்படவும் வாய்ப்பு உண்டு என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-10)

## திருநெல்வேலி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் அறக்கொடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி லயன்ஸ்கழக ஏற்பாட்டில், அறக்கொடை வழங்கல், வைபவம் எதிர் வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப 10 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கருத்தரங்கு மண்டபத்தில் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆகியோரும்,

சிறப்பு விருந்தினர்களாக லயன் ஆர். நடராஜா, லயன் டாக்டர் என். எஸ். அருளானந்தம், லயன் என். எஸ். தங்கராஜா, லயன் கே. வி. முத்துக்குமாரசாமி, லயன் டாக்டர் செல்வி என். கனகரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வண பிதா எஸ். பி. நேசகுமார் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வில் வலது குறைந்த 10 பேருக்கு முச்சக்கர வண்டிகளும், நல்லை ஆதீனத்திற்கு இரு கூரை விசிறிகளும், திருநெல்வேலி சைவச்சிறார் இல்லத்திற்கு நுளம்பு வலைகளும், நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்திற்கு அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இயந்திர உதவியுடன் கடிதங்கள் தரம்பிரிப்பு இவ்வாண்டு நடைமுறை

(கொழும்பு)

இவ் ஆண்டிலிருந்து கடிதங்களை தரம்பிரிப்பதற்கு இயந்திரங்கள் உபயோகிக்கப்படவுள்ளதாக அஞ்சல் மா அதிபர் எம். பியசேன தெரிவித்துள்ளார்.

இதனால் சகல கடிதங்களிலும் சேரவேண்டிய இடத்திற்கான அஞ்சல் குறியீடுகளை குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமக்களின் வசதிக்காக அஞ்சற் குறியீடு சார்பான மும்மொழிக் கைநூல் தபாலகங்களில் விற்பனைப் படுத்தப்படவுள்ளதுடன், ஒவ்வொரு அஞ்சலகங்களிலும் அவற்றிற்குரிய தபாற் குறியீட்டு இலக்கங்கள் வழங்கப் பட்டுள்ளது.

பொதுமக்களின் வசதிக்காக தபாலட்டை மற்றும் கடிதவுறை என்பவற்றில் குறியீட்டு இலக்கத்தை எழுத 5 கூடுகள் உள்ளன. இக் குறியீடுகளை உபயோகிப்பதால் அஞ்சல்கள் வெவ்வேறு பிரதேசங்களுக்கு மாறிச் செல்லாது பாதுகாக்கப்படும். (உ-3)

# மீள் குடியமர்வுக்குத் தடைபோட்டு சமாதானச்சூழலைக் குழப்பாதீர்கள்

## பொன்னாலை மக்கள் ஒன்றியம் பிரதமர் ரணிலுக்கு மகஜர்

(திருநெல்வேலி)

**விடுதலைப் புலிகளின் பலமான நிலை காரணமாகவும் இலங்கைப் பிரதமராகிய தங்களின் துணிச்சலான செயற்பாடு காரணமாகவும் இன்று இலங்கைத் தீவில் நிலவும் அமைதியானது எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவிடத்து குழம்பக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம்.**

பொன்னாலை மக்கள் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர், எமக்கு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த நாம் மீளக்குடியமர்வைத் துரிதப்படுத்துமாறு கோரி கடந்த 07. 05 2002 அன்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் க.சண்முகநாதன், இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆகியோருக்கு மகஜர்களை கொடுத்தோம். அவர்கள் இது பற்றி அக்கறைஎடுக்கவில்லை. இதனால் நாம் ஏமாற்றமடைந்தோம்.

எமது மக்களின் தற்போதைய நிலையைத் தங்களுக்குக் கூறுவதுசிறந்ததென நினைக்கிறோம். யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வன்னிப் பெரு நிலப்பரப்பிற்குச் சென்றோரின் அனேக வீடுகள் அயற்கிராமங்களில் இருந்தன. அவற்றிலேயே எமது மக்களில் பெரும்பாலனோர் இதுவரை குடியிருந்தனர். தற்போதைய சமாதானச் சூழலில் வன்னிக்குச் சென்ற மக்களும் யாழ் குடாநாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள், தமது வீடுகளை விட்டு வெளியேறும்படி கூறுகின்றார்கள், இந் நிலையில நாம் எங்கு செல்வது? கடும் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் கைலாகு கொடுத்துச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள். மீளக்குடியமர்வதற்குமுக்கியத்துவம்கொடுத்துப் பேசுகிறார்கள். ஆனால் அதனைச் செயற்படுத்துவதில் அசமந்தப் போக்கே காணப்படுகின்றது. இதனால் ஏதுமறியாத அப்பாவி மக்கள் வாழ இடமிருந்து வாழ வழியின்றி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

மீளக்குடியமர்விற்கு இன்று இராணுவத் தரப்புப் போடுகின்ற முட்டுக்கட்டை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பதம். ஆனால் எமது பொன்னாலைக் கிராமத்தை எடுத்துக் கொண்டால் இது உயர் பாதுகாப்பு வலயம் இல்லை. அத்தோடு கடற்படையினருக்கு எந்த வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த இடமும் அல்ல, தேவையற்ற விதத்தில் பல நூற்றுக்கணக்கான மக்களின் இருப்பிடங்களைக் கடற்படையினர் முடக்கி வைத்திருக்கின்றனர். எமது கிராமத்தை அடுத்திருக்கின்ற காட்டுப்புலம், வறுத்தோலை போன்ற கிராமங்களிலும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் உள்ளனர்; அவர்களுக்கும் மேற்கூறப்பட்ட விடயங்கள் பொருந்தும்.

கடந்த 12 வருடங்களாக நாம் அனுபவித்த துன்பங்கள் போதும் என்ற நிலையில் பொன்னாலை மக்கள் அனைவரும் சென்ற 08. 12. 2002 அன்று ஒன்று கூடி அமைக்கப்பட்ட மக்கள் ஒன்றியத்தின் ஊடாக ஒரு மகஜர்தயாரித்து யாழ் மாவட்ட அரசஅதிபருக்குமுகவரியிட்டுஅதன்பிரதிகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை ஆகியோருக்கு கடந்த 17. 12. 2002 அன்று அனுப்பினோம். மக்கள் மீளக் குடியமர்விற்குத் தடையாக இருக்கின்ற 7 கோரிக்கைகளை அதில் குறிப்பிட்டு அதனை நிறைவேற்றித் தர ஆவன செய்யுமாறு கேட்டிருந்தோம்; 27. 12. 2002 இற்கு முன்னர் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பது தவிர்க்க முடியாததாகும் என்று அதில் கூறியிருந்தோம். அந்த 7 கோரிக்கைகளையும்தங்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்;

- பொன்னலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலைக்கு முன்னாலும்வரதராஜப் பெருமாள் ஆலயச் சுற்றாடலிலும் ஆங்காங்கே இருக்கின்ற பிரதான முகாம்கள் உட்படச் சிறு காவலரண்கள் அனைத்தும் உடனடியாக அகற்றபட வேண்டும்;
- வரதராஜப் பெருமாள் ஆலயத்திலிருந்து திருவடி நிலை வரையுள்ள பிரதான முகாம்கள் உட்படச் சிறுகாவலரண்கள் அனைத்தும் திருவடி நிலைக்கு அப்பால் பின்நகர்த்தப்படவேண்டும்;
- பொன்னாலை கிராமத்தை ஊடறுத்து திருவடி நிலை வரை நீண்டுசெல்கின்ற பிரதான மண் அணை (பண்ட்) மற்றும் முட்கம்பி வேலிகள் என்பன கடற்படையினரால் அகற்றித்தரப்பட வேண்டும்.
- நெல்லியானிலிருக்கின்ற கடற்படை முகாம் அகற்றப் படுவதன் மூலம் சுழிபுரம் சந்தியிலிருந்து நெல்லியானூடாகப் பொன்னாலைக்குச் செல்கின்ற வீதி திறக்கப்பட வேண்டும் அத்தோடு பொன்னாலையூடாகக் கீரிமலைக்குச் செல்வதற்கு பொது மக்களுக்குக் கடற்படை அனுமதியளிக்க வேண்டும்;
- பொன்னாலையில்பெரும்பான்மையாக மீனவக் குடும்பங்கள் வாழ்வதால் கடற்றொழிலில் ஈடுபட எந்தவிதக் கட்டுப்பாடுகளும் விதிக்கக் கூடாது என்பதுடன் பாஸ் நடைமுறைகள் முற்றாக நீக்கப்படவேண்டும்.
- மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் வயல்வெளிகளிலும் மிதிவெடிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;
- மேற்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட நிலையில் அடிப்படை வசதிகளுடன் பொன்னாலை மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-43)

## ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் பெரும் தொகைப் பணம்

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் 25 ஆயிரத்து 600 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை சேர்ந்துள்ளதாக தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது நாட்டின் மாபெரும் சமூக பாதுகாப்புத் திட்டமாகக் கருதப் படுகிறது.

அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த 90 லட்சம் தொழிலாளர்கள் இந்நிதியத்தின் நன்மைகளைப் பெறஉரித்துடையவர்களாகின்றனர்.

அத்துடன் இந்த வருடத்தில் அங்கத்துவர்களிடம் இருந்து இன்னும் ஆயிரத்து 750 கோடி ரூபாவை பெற முடியும் என ஊழியர் நம்பிக்கை நிதியம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

நிதியத்தில் இருந்து நன்மைகளைப் பெறுவதற்கு என விண்ணப்பித்த 65 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களுக்கு கடந்த வருடம் 9 பில்லியன் ரூபா வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது;

(உ-10)

## எதிரணிக் கட்சிகள் பாராளுமன்ற வளவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### அரசின் நிலைப்பாட்டை கண்டித்து நடத்த திட்டம

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சக்திவாய்ந்த ஒலிபரப்புக் கருவி வழங்கியமை மற்றும் அதி உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசின் நிலைப்பாடு ஆகியவற்றை கண்டித்து எதிரணிக் கட்சிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற வளவினுள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளன.

நோர்வே அரசாங்கம் புலிகள் இயக்கத்திற்கு ஒலிபரப்புக்கருவி வழங்கியது தொடர்பாக பாராளுமன்றத்தில் முழுநாள் விவாதம் ஒன்றை நடத்த கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என எதிரணி அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகரிடம் வேண்டுகோள் ஒன்றையும் விடுக்கவுள்ளனர்,

இதே வேளை, நோர்வேக்கான கொழும்புதூதுவர் அலுவலகம் நாட்டின் இறைமை ஐக்கியம் ஆகியனவற்றிற்கு மாறாக செயல்பட்டுள்ளது.

ஆகையால், இவ் விடயத்தை முழுமையாக ஆராய வேண்டும். அதற்காகவே விவாதம் ஒன்றை கோரியுள்ளோம் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ்குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டிற்கான முதல் பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## சமாதான முயற்சிகள் வலுவடைந்தால் பாதுகாப்பு படைகள் மீளக் கட்டமைக்கப்படும்

### பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தகவல்

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் வலுவடையுமானால் பாதுகாப்பு படைகள் மீண்டும் கட்டமைக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் அறிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் இது தொடர்பாக மேலும்தெரிவிக்கப்படுவதாவது;

ஒருலட்சத்து 50ஆயிரம்பேர் கொண்ட இலங்கைப் படையணி மீள் கட்டமைப்புச்செய்வதுகுறித்துஒருகுழு தற்போது பரிசீலித்து வருகிறது.

பாதுகாப்பைப் பலப்படுத்தும் அதே நேரம் அதற்கான செலவீனங்களைக் குறைப்பது குறித்து இக்குழு ஆராயும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் படைகள் சரியாக மீளக் கட்டமைக்கப்படவில்லை. எனவே, படைகளின் ஒரு சிலதுறைகளைவிஸ்தரிக்க வேண்டியுள்ளது.

அத்துடன். அச்சுறுத்தலிற்கு இலக்காகி இருக்கும்கரையோரப் பகுதிகள் பொருளாதார வலயங்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் மோசடிகள் என்பனவற்றைத் தடுப்பதிலும் ஆயுதக் கடத்தல்காரர்களை மடக்குவதிலும் சிரத்தை காட்டப்படும்.

இதற்குத்தேவையானவளங்களை எதுவித கட்டுப்பாடுகளும் இன்றிவிநியோகிக்கவுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,

படைகளின் மறுசீராக்கல் குறித்து இணையத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

## தொடர்பு கொள்க!

(திருநெல்வேலி)

கடந்த 10ம் திகதி நெல்லியடியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்ட அனைவரையும் வடமராட்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்துடன் எதிர் வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

(உ-43)

# விடைபெறும் 2002







ஈழத் தமிழர்கள் பொங்கி எழுந்தனர்.




மண்ணின் மைந்தர்களை வரவேற்க முண்டியடித்தனர் மக்கள்.


மறைந்த மாவீரர்களுக்கு மனதுருகும் அஞ்சலி






மானுடத்தின் தமிழ்க் கூடல்—2002

# கடுங்குளிரினால் 160 பேர் பங்களாதேஷில் மரணம்

(டாக்கா)

பங்களாதேஷில் நிலவும் கடும் குளிரினால் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 160 பேர் உயிரிழந்துள்ளனர்.

பங்களாதேஷின் வடக்குப் பகுதியில் 9 மாவட்டங்களில் அதிகமாகக் குளிர் நிலவியுள்ளதாகவும் இப்பகுதியைச் சேர்ந்தவர்களில் 30 பேர் நேற்றுமுன்தினம் இறந்துள்ளதாகவும் இவர்கள் அனைவரும் வயதானவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த உயிரிழப்புகளையடுத்து, குளிரால் மேலும் பலர் இறந்துவிடலாமென்ற அச்சம் நிலவி வருவதாக பங்களாதேஷ் பிரதமர் கலிதாஸியா கவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இப்பகுதியில் குளிரால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மக்களுக்கு உடனடியாகக் கம்பளி ஆடைகளை வழங்குமாறும் அவர்களுக்கேற்ற உணவு வசதிகளைச் செய்து கொடுக்குமாறும் அந்தந்தத்துறை அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷில் ஒவ்வொரு ஆண்டும் குளிரால் அதிகமானோர் இறப்பதாக இன்னொரு தகவல் வெளியாகியுள்ளது.

(பி-02)

# அமெரிக்காவுடன் சேர்ந்து இஸ்ரேல்-துருக்கி யுத்த ஒத்திகை

(வாஷிங்டன்)

அமெரிக்கா,இஸ்ரேல் மற்றும் துருக்கி யுத்தக் கப்பல்கள் வளைகுடாக் கடற்பரப்பில் கூட்டாக யுத்த ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன.

இம் மூன்று நாடுகளும் தமக்கிடையிலான உறவுகளை வெளிக்காட்டும் வகையிலேயே இந்த ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வழமையான பயிற்சிகளின் ஒரு பகுதியாகவே இந்த ஒத்திகை அமைந்துள்ளதென இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அத்துடன் இப்பயிற்சிகளுக்கும் ஈராக்மீதான யுத்தத்திற்குமிடையில் எதுவித தொடர்புகளும் இல்லையென இஸ்ரேல் சுட்டிக்காட்டியுள்ளது.

(பி-2)

# பிறேஸில் நாட்டில் புதிய ஜனாதிபதி பதவி ஏற்பு

(பிறேஸிலியா)

பிறேஸில் ஜனாதிபதியாக இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த இனேஷியோலுூலாடி சில்வா பதவியேற்றுக் கொண்டார்.

கடந்தமாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவரே இனேஷியோலுூலாடி சில்வா.

இவர் பதவியேற்றுக் கொண்டபின்னர் ஆற்றிய உரையின் போது வறுமையின் பிடியிலிருக்கும் பிறேஸில் மக்களைச் சுபீட்சமான வாழ்க்கைக்குக் கொண்டு செல்லவிருப்பதாகக் கூறியுள்ளார்.

(பி.02)

# அமெரிக்கா - வடகொரியா அணு ஆயுத சிக்கல்

## தீர்வுக்கு வழி பிறக்குமா?

(சியோல்)

அமெரிக்கா எந்த வகையிலாவது வடகொரியாவை அழித்துவிடத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றது. இந்த நிலையில் தன்பாதுகாப்புக்காக வடகொரியாவிடம் அணு ஆயுதம் இருப்பது அவசியமாகிறது என்று அந்த நாட்டு அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஆனால், அமெரிக்க கருத்துப்படி வடகொரியா அணு ஆயுத உற்பத்திமூலம் அமெரிக்காவையும் அதன் நேசநாடுகளையும் அச்சுறுத்தி காரியம் சாதிக்கப்பார்க்கின்றது.

ஏற்கனவே இருநாடுகளுக் கிடையிலும் நடைமுறையில் இருந்துவரும் ஒப்பந்தத்தை மீறுவதானது எநதவொரு தரப்புக்கும் நன்மையளிக்கப் போவதில்லையென்றும் அமெரிக்கத் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடகொரியா தனது அணு ஆயுதத்திட்டங்களை அழித்தொழிப்பதற்கு முன்னர், அமெரிக்க அநாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டு வடகொரியாவை நிலைத்திருக்க வழிசெய்ய வேண்டுமென அந்நாடு வற்புறுத்தி வருகின்றது.

ஆனால் அமெரிக்காவோ அவ்வாறான அநாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு முன்னர் வடகொரியா தனது அணு ஆயுதத்திட்டங்களை அழித்தொழித்து விட வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது.

இந்நிலையில், வடகொரியாவிலிருந்த ஐ.நா.கண்காணிப்பாளர்கள் வெளியேற்றப்பட்டிருப்பதும்,அணுநிலைய கண்காணிப்புக் கருவிகள் அகற்றப்பட்டிருப்பதும் இரு தரப்பிலும் உணர்ச்சிகளை வேகப்படுத்தியுள்ளது.

நிலைமை இன்னும் மோசமடையாதவகையில் இரு தரப்பையும் பேச்சுவார்த்தைக்குட்படுத்தும் முயற்சியில் தென்கொரியா ஈடுபடவேண்டும் எனப் பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா தனது இறுக்கமான நிலைப்பாட்டை சற்றுத் தளர்த்தி பேச்சுவார்த்தைக்கு இணங்க வேண்டும் என்றும் வடகொரியா, அமெரிக்கா மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் செயல்பாட்டை கைவிட வேண்டும் என்றும் தென்கொரிய அரசியல் நிபுணர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

(பி)

# பகைமையுணர்வை தளர்த்த பாகிஸ்தான் முன்வர வேண்டும்

## புத்தாண்டில் இந்தியப் பிரதமர் வேண்டுகோள்

(புதுடில்லி)

பாகிஸ்தான், காஷ்மீர் விவகாரத்தில் கவனம் செலுத்துவதை நிறுத்தி விட்டு இருநாடுகளுக்கிடையிலான நீண்ட காலப் பகைமை உணர்வைத் தளர்த்து முகமாக கலாசாரப் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு இந்தியபபிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாஜ் பாகிஸ்தானைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

காஷ்மீர் பிராந்தியப் பிரச்சினையால் இராணுவரீதியான நெருக்கடிக்குட்பட்டிருந்த இரு அயல் நாடுகளும் இந்தப் புதிய ஆண்டில் கட்டுப்பாடுகளுடன் அணு ஆயுத யுத்தத்தைத்தவிர்த்திட வேண்டுமெனப் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் புத்தாண்டுச் செய்தியில் கூறியிருந்ததையடுத்தே, இநதியப் பிரதமா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

(பி-2)

வீரப்பனைப் பற்றி

# புதுடில்லியில் ஆலோசனை

(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கான விஷேட பாதுகாப்புக் கூட்டம் ஒன்று நாளை புதுடில்லியில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழக மற்றும் கர்நாடகப் பொலிஸாருக்குமிடையில் இப்பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகக் கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா கூறியுள்ளார்.

(பி.02)

# ஹெலியில் தப்பிச்சென்ற சிறைக் கைதிகள்

## சென்ஜுவானில் சம்பவம்

(கெரிபியன்)

சென்ஜுவானிலுள்ள பெட்ரோறிக்கோ சிறைச்சாலையிலிருந்து 5 கைதிகள் ஹெலிகொபடரில் தப்பிச் சென்றுள்ளனர்.

கெரிபியன் தீவுகளிலிருந்து கட்டட நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்கென ஹெலிகொப்டர் ஒன்றை வாடகைக்கு அமர்த்தியிருந்த இனந்தெரியாத நபர்கள் இருவர், விமானியைத் துப்பாக்கி யைக் காட்டிச் சிறைச் சாலையின் மேல் கூரையில் தரையிறக்குமாறு கூறி மேற்குறிப்பிட்ட 5 கைதிகளையும் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்றுள்ள 5 கைதிகளும் கடும் குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டு நூறாண்டு கால சிறைத்தண்டனை அனுபவித்து வந்தவர்களென பெட்ரோறிக்கோ சிறைச்சாலை அதிகாரிகள் கூறுகின்றனர்.

(பி.02)

# 100 வயது அண்ணனின் மறைவைக் கேட்டு 95 வயது தம்பி மரணம்

(இடைப்பாடி)

100 வயது அண்ணன் உயிரிழுந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த 95 வயது தம்பி, மாரடைப்பால் காலமானார்.

இச்சம்பவம் தமிழ்நாட்டில் இடைபபாடி அருகே புதன்கிழமை காலையில் நிகழ்ந்தது. இடைப்பாடிகளப் பாளையத்தைச் சேர்ந்தவர் பெரியதம்பி(வயது100).என்பவர் உடலநிலை பாதிக்கப்பட்டு புதன் கிழமை இறந்தார். இச்செய்தியறிந்த இவரது தம்பி மாரியப்பன் (வயது95) அதிர்ச்சியால் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். இவர் இதே ஊரில் வேறு இடத்தில் வசித்து வந்தார். ஒருவருக்கொருவர் பாசம் கொணடிருந்த சகோதரர்கள் ஒரே நாளில் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

(பி)

உலக தரிசனம்

# போர்நிறுத்த உடன்பாட்டை சூடான் அரசு மீறிவிட்டது

## போராளிகள் குற்றச்சாட்டு

(கார்டும்)

சூடான் அரசாங்கம் யுத்தநிறுதத ஒப்பந்தத்தை மீறிவிட்டது என்று சூடானின் விடுதலை அமைப்பான எவ்.டி.எல்.எம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இவ்வமைப்பு,சூடானில் தற்போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டுள்ள,இந்தநிலையில் சூடான் அரசு தனது இராணுவப்படையின் உதவியுடன் சிவிலியன்கள் வாழும் பகுதிகளிலும், பொருளாதாரக் கேந்திர நிலையங்கள் மீதும் விமானத்தாக்குதல்களை நடத்தி யுள்ளது. இச்செயல் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் ஒருவன் செயல் என்று குறிப்பிட்டுள்ளது.

(பி.02)

## ஆயுதப் பரிசோதகர்களுக்கு ஈராக் மீண்டும் அழைப்பு

(நியூயோர்க்)

ஈராக் அரசின் இரண்டாவது அழைப்பை ஏற்றுக் கொண்ட ஆயுதப் பரிசோதகர்களின் முக்கிய அதிகாரியான ஹான்ஸ் பிளிக்ஸ் மீண்டும் ஈராக் பயணமாகவிருக்கிறார்.

இவர் எதிர்வரும் 18ஆம் திகதி பக்தாத் செல்வாரென ஐக்கிய நாடுகள் அமைப்பு கூறுகிறது.

இம்மாதம் 27ஆம் திகதி ஈராக்கின் ஆயுத சோதனைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிடுவதாக இருந்த ஹான் பிளிக்ஸ் ஈராக்கின் இந்த அழைப்பு தவிர்க்க முடியாதது ஒன்றெனக் கூறி இவ்வறிக்கை தயாரிப்பதை இடை நிறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி ஈராக தலைநகர் பாக்தாத்திற்குச் செல்லவுள்ளார் என்று ஐக்கிய நாடு களின் அமைப்பு கூறியுள்ளது.

(பி.02)

## தென்னாபிக்க டொனான்ஸ்பேர்க் நகரில் குற்றச் செயல்கள் அதிகம்

(டொன்ஸ்பேர்க்)

உலகில் பாரிய வன்முறைகள் மற்றும் குற்றச் செயல்கள் இடம் பெறும்நகரம் தென் ஆபிரிக்காவின் டொன்ஸ்பேர்க் நகரமென அந் நாட்டு பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த நகரத்தில் வருடமொன்றிற்கு 50 ஆயிரம் பாலியல் வன்முறைச் சம்பவங்களும் 20 ஆயிரம் கொலைச் சம்பவங்களும் இடம் பெற்று வருவதாக அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)



கென்யா நைரோபி பார்க் நகரில் தங்களது தலைவர் கிபாகி புதிய அதிபராகப் பதவியேற்ற நிகழ்ச்சியில், குதூகலத்தில் இருந்த மக்கள் பதறும் வகையில், தன் மீது அமர்ந்திருந்த வீரனையே கவிழ்க்கிறது இந்தக் குதிரை

# பெண்களுக்கும் இராணுவ அதிகாரப் பதவிகள்


(டாக்கா)

பங்களாதேஷில் முதல் முறையாகப் பெண்கள் இராணுவ அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாண்டு இராணுவப் பயிற்சி வகுப்புகளை வெற்றிகரமாக முடித்த 20 பெண்கள் இளநிலை இராணுவ் அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வங்கதேசத்தின் சிற்றகாங நகரில் நடைபெற்ற ஓர் வைபத்தில் வங்கப்பிரதமர் கலிதாஸியா பார்வையிடும் வகையில் இவர்கள் அணிவகுப்பு ஒன்றை நடத்தியுள்ளனர் என்றும், இதனைப் பார்வையிட்ட பிரதமர் தனது வாழ்த்துக்களைக் கூறி அவர்களது திறமையைப் பாராட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(பி.02)



பனிக்கட்டியைச் செதுக்கி பூனைச் சிற்பத்தை உருவாக்குகின்றனர் ரஷிய மாணவர்கள். யுலியா (இடது) அன்டன் செபோன்னென்கோ (வலது) மாஸ்கோவில் பனிப்பாறை சிற்பக் கண்காட்சிக்காகத் தயாராகிறது இப்பூனை.

ஒழுக்கமும் வாய்மையும்
நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார்
குறள்

# வலம்புரி

## மீள்குடியேறல் காலத்தின் தேவை!

நாட்டில் இருபது வருடகால யுத்தத்தால் ஏற்பட்டபெரும் பாதிப்பு இடம்பெயர்வாகும். சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தமக்கள்பல்வேறு இடங்களிலும் குடியிருக்கின்றனர். இவ்வாறுஏற்பட்ட இடம்பெயர்வு தனிப்பட்டவாழ்க்கையில் மட்டுமல்ல; சமூகவிழுமியங்களிலும் ஈடுசெய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தத்தம் சொந்தக்கிராமங்களில், இறுக்கமான கட்டுக்கோப்புடன் வாழ்க்கைநடத்திய குடும்பங்கள் இடப்பெயர்வு என்ற அலைமோதலில் திசைமாறி, சிறப்புமிகு கிராமியப் பண்பாடுகளை இழந்துள்ளன.

இன்றைய இளம் சமூகத்தின்நடத்தைமாற்றங்களுக்கும், பெரியவர்களைக் கனம்செய்யாத இறுமாப்புக்கும் அடிப்படைக்காரணமாக இருப்பதுஇடம்பெயர்வுஎன்பது மறுக்கமுடியாதஉண்மை இடம்பெயர்வு காரணமாக பெற்றோர்களின் மேற்பார்வையை, ஊரவர்களின்கண்காணிப்பை இழந்த இளம்பருவத்தினர் மரபுவழிப்பண்பாடு ஒழுக்கங்களை மறந்தனர், மாறுபட்ட நட்புகள். அடிப்படை ஒழுக்கவரம்புகளை மீறச் செய்தது. சொந்தக்கிராமங்களில் மேற்கொண்ட வாழ்வியல் தொழில் முயற்சிகள் இழக்கப்பட்டதால், பொழுதுபோக்கு நேரம்அதிகரித்தது. இப்படியே இடம்பெயர்வு வாழ்க்கை, மரபுவழிக் கட்டுக்கோப்பை உடைத்ததுடன் பிறந்தமண்ணையும் மறக்க வைத்தது.

இதன் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும்தமது சொந்த இடங்களுக்குச் செல்லக்கூடியதாகஇருந்தும் பின்னடிக்கின்றனர். குறிப்பாக யாழ்நகர மையத்தைஅண்டிய பிரதேசங்களில் குடியிருப்பவர்கள் மீண்டும் தமதுவாழ்விடங்களுக்குச் செல்வதற்குப் பல்வேறுகாரணங்களை முன்வைத்து பிற போடுகின்றனர்.

இத்தகைய துரதிஷ்டமானமுடிவுகள். கிராமங்களின் வளங்களை அழியவிடுவதற்கு ஏதுவாகும். எனவே இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பங்களும் தத்தம் சொந்த இடங்களில் மீளவும்குடியிருக்க வேண்டும், குடியிருக்க முயற்சிக்க வேண்டும்.

# பூமாலை சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் பாமாலை பாடி நாம் பரவச நிலை பெறுவோம்

'மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளாம்' ஆமாம் இந்த அழகியதேனொழுகும் பாடலை ஸ்ரீ ஆண்டாள் பாடியருளினார். துளசிச் செடிகளின் நடுவே தெய்வக்குழந்தையாக அவதரித்து நாராயணன் பேர் பாடும் பெரியாழ்வார் கண்டெடுத்து வளர்த்தெடுத்த அருமையான அழகிய பெண்தான் ஸ்ரீ ஆண்டாள் என்னும் கோதை நாச்சியார்;

தினமும் ஸ்ரீரங்கப் பெருமானுக்கு பாமாலையும் பூமாலையும் தொடுத்துஅணிவித்து பெருமானை அழகுபார்க்கும் ஆனந்த பக்தன் பெரியாழ்வார் ஒருநாள் இவர் தொடுத்து வைத்த மாலைகளை அரங்கனுக்குச் சூட்டும் முன்பே தான் அணிந்து அழகுபார்த்தாள் கோதை ஆண்டாள். இதைக்கண்ட பெரியாழ்வார் சினந்து ஆண்டாள் அணிந்த மாலைகள் அனைத்தையும் வெளியே வீசிவிட்டு புதிதாக மாலைகள் தொடுத்துக்கொண்டு போய் அரங்கனுக்குச் சாத்தினார். ஆனால் அரங்கனின் தோற்றத்தில் அன்று அழகை ஆழ்வாரால் காணமுடியவில்லை. ஆழ்வாரின் மனதில் பெரிய குறை தோன்றியது. ஆண்டாள் அரங்கனுக்குக் கட்டிய மாலைகளை அணிந்து விட்டதை ஆழ்வார் பெரியகுறையாக மனதில் நினைந்து இரவு முழுவதும் வருந்தினார்.

### சூடிக் கொடுத்த சுடர்க் கொடி

ஒருசாமத்திலே ஆழ்வார் அசதியால் தூங்கிப்போனார்;

## வெள்ளி நற்சிந்தனை

அப்போது அரங்கன் ஆழ்வாரின் கனவில் தோன்றி 'இன்று நீர் ஏன் ஆண்டாள் அணிந்த மாலைகளை எனக்குச்சாத்தவில்லை. தினமும் ஆண்டாள் சூடி அழகு பார்த்த மாலைகளைத்தானே நீர் எமக்கு சூட்டியுள்ளீர். இனிமேல் தினமும் கோதை சூடிய மாலைகளைத்தான் எமக்குச் சூட வேண்டும்' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்;

**மாருதி**
ஆவரங்கால்

பெரியாழ்வாரும் தனது தவறையுணர்ந்து அரங்கனின் ஆணைப்படியே ஆண்டாள் சூடிய மாலைகளைத்தான் அரங்கனுக்குச் சூட்டி வரலானார்.

இதனால் ஆண்டாளுக்கு சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்னும் திருநாமம் வரலாயிற்று;

ஆண்டாளுக்குத் திருமணம் பேசி பெரியாழ்வார் வந்த போதெல்லாம், தான்மணந்தால் அரங்கனையே மணப்பேன் என்று கூறித்தன் வயதினையொத்த கன்னிப்பெண்களை ஒன்று சேர்த்து மார்கழி மாதம் முழுவதும் நோன்பு இருந்து ஸ்ரீமந்நாராயணனையேதுதித்து திருப்பாவைப்பாடல்களைப்பாடினார்.

இவரதுமுப்பது 'திருப்பாவை' ப்பாடல்களும் மிகமிக இனிமையான தமிழ்ச்சுவை மிகுந்த பாடல்களாகும் இவரது இனிமையான பாடல்களில்சில வரிகளை கவிஞர்கள் கையாண்டிருப்பது கோதையின் பாடல்களின் சிறப்பைக்காட்டுகின்றது: 'மாலே மணிவண்ணா' 'வங்கக்கடல்கடைந்தமாதவனை' 'எல்லேஇளங்கிளியே' 'குத்துவிளக்கெரிய' போன்றபாடல்களின்வரிகள் தனிச்சுவை மிகுந்தன;

### மாதவனே காதலன்

மாதவனையே தனதுகாதலனாக வரித்து தினமும்அதற்காக நோன்பிருந்து ஈற்றில் மாதவனுடன் இரண்டறக் கலந்தவர்தான் கோதையெனப்படும் ஸ்ரீ ஆண்டாள் ஆவர். பூமாதேவியேஸ்ரீ ஆண்டாள் ஆவர்.

வைஷ்ணவ திருத்தலங்களில் மார்கழிமாதம் முப்பது நாட்களிலும் அதிகாலை வேளையில் தொண்டரடிப் பொடியாழ்வார்பாடிய திருப்பள்ளி எழுச்சிப்பாடல்களையும்' ஆண்டாள்பாடிமாதவனைமயக்கிய திருப்பாவைப் பாடல்களையும் பண்ணோடு பாடி மாயவனைப் பூசித்து வணங்கி பாவைநோன்பு அனுட்டிப்பதை மக்கள் வழக்கமாகக்கொண்டொழுகுகின்றார்கள்;

குறிப்பாக திருமணமாகாத கன்னியரும் இளைஞரும் தவறாது இந்தப்பாவை நோன்பை அனுட்டிப்பார்களாயின் அவர்கள்விரும்பிய மணவாழ்வு சுகமாகஅமையும் என்பது திண்ணம்;

### மார்கழியில் பாவைபாடுவோம்

தெட்சணாயண காலமாகிய தேவர்களின் இராக்காலம்முடிவடையும் புலர்காலமாகிய அதிகாலைப்பொழுதுமார்கழி மாதமாகும். இறைவனைத் துயிலெழுப்பும் விதத்தில் அமைந்தன தான் இப்பாடல்களின் சிறப்பாகும்.

எனவே தேவர்களின் புலர்காலமான மார்கழிமாதத்தில் நாமும் ஆண்டாளின் பாவைப் பாடல்களைப்படியும் கேட்டும் நாராயணனை நினைந்து வழிபட்டுப்பெரும் பேறடைவோமாக 'மாதங்களில் நான் மார்கழியாகவுள்ளேன் ●

கீதையில் கண்ணன்

### திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் ஆலய அறநெறிப் பாடசாலையில் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (உ)

### இலவச விநியோகம்

(அரியாலை)

திருக்கோணேஸ்வர ஆலய தேவாரப் பாடல்ஒளிப்பேழை நந்திக் கொடி என்பவற்றை இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு சமய நிறுவனங்களுக்கு இலவசமாகவிநியோகித்து வருகின்றது. (உ-225)

# புத்தரைக் களங்கப்படுத்தும் திரைப்படம் நோர்வேயில் தயாரிக்கப்பட்டதா?

## அருந்த சர்ச்சைக்கு அடிகோலுகிறது பௌத்த காங்கிரஸ்

(கொழும்பு)

கௌதம புத்தரைநிந்தனை செய்தும், இலங்கையின் ஆயுதப்படைகளை பழித்துரைப்பதாகவும் சித்திரிக்கப்பட்டு வெளிநாடுகளில் திரையிடப்படும் 'புத்தரின் பெயரால்' என்னும் திரைப்படத்தை திரையிடாமல் தடுக்குமாறு, அகிலஇலங்கை பௌத்த காங்கிரசின் மகளிர்பிரிவுஇலங்கை அரசை வற்புறுத்தி வருகிறது.

பிரிட்டனிலும், நோர்வேயிலும் இப்படம் திரையிடப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி பௌத்த காங்கிரசின் செயலாளர் இந்திராணி தெய்வேந்திரா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்

இதனை நோர்வேயில் இடம்பெயர்ந்துவாழும் புலிகளே தயாரித்துள்ளதுடன், நோர்வே நாட்டிலேயே படமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக இலங்கையையும், குறிப்பாக பௌத்தர்களையும் நிந்தனைசெய்வதாக இப்படம் அமைந்துள்ளது;

இன்றைய முக்கியமான சமாதான காலகட்டத்தில் இவ்வாறானதொரு பழிப்புரை, அவமானம் தருவதாகும்.

பௌத்த சாசனத்தை பேணிவளர்ப்பதாக அரசியற் சட்டம் தெளிவாகப்பிரகடனப்படுத்தியுள்ளது. இந்நிலையில் இதுபற்றி அரசாங்கம்உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும்என்று கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் பெய்ஸ் முஸ்தாப்பா இது தொடர்பாக பிரிட்டனின் சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் கிம் ஹவலையும், சினிமாத்துறை அமைச்சர் கே கிப்பியாஸ்ஸையும் சந்தித்து இத்திரைப்படத்திற்கெதிராக நடவடிக்கை யெடுக்கும்படி கோரவுள்ளார்என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## தினசரி தியானம்

### வாழ்க்கைப் பாடங்கள்

தினமும் காலையில் நாலு மணிக்குத் துயில் எழு; அதிகாலையில் பகவானுடைய நாமத்தை, நாம பிரார்த்தனை உருவத்தில் கோவிந்த ஜெய ஜெய கோபால ஜெய ஜெய ராதாரமண ஹரி கோவிந்த ஜெய ஜெய என்று பாடப் பழக்கம் செய்து கொள். ஹரி நாமத்தைப் பாடுங்கால், அவரே உன்னுடைய இருதயத்தில் வீற்றிருந்து நீ பாடுவதை எல்லாம் கேட்கிறார் என்று நினைத்துக் கொள்;

-சுவாமி சிவானந்தர்

தொ. தொ. துறை வளர்ச்சியில்

## கையடக்க தொ. பேசிகள் காத்திரமான பங்களிப்பு

(கொழும்பு)

கடந்தஆண்டில் தொலைத்தொடர்புத்துறை கணிசமான வளர்ச்சியை அடைந்துள்ளதாக மத்தியவங்கி கூறியுள்ளது;

இதுபற்றி மத்தியவங்கி மேலும் கருத்து வெளியிடுகையில்;

கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையே இவ்வாறான வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

கடந்த ஜூலைமாதம்முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 29 சதவீதமான வளர்ச்சி காணப்படுகிறது.

இவற்றைவிட சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் குறிப்பாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொலைத்தொடர்பு சேவைகளின் வளர்ச்சி மிகவும் அதிகரித்துள்ளதுஎன்று மத்தியவங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (உ-11)

## விரிவுரைகள் 6 ஆம் திகதி ஆரம்பம்

2001 ஆகஸ்ட், 2002 ஏப்ரல் ஆகிய மாதங்களில் கல்விப் பொதுதராதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சகலபீட மாணவர்களுக்குமான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன,

சகலபீட மாணவர்களையும் அன்றைய தினம் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

(உ-3)

### முஸ்லிம்...

புலிகளின் ஆதரவுப் பத்திரிகையான தமிழ் ஹார்டியன் தனது சிறப்புச் செய்தியில் தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை மூன்றாம் தரப்பினருக்கிடையிலானதல்ல என்று குறிப்பிட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கலில் முஸ்லிம் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்று முஸ்லிம் காங்கிரஸ் கருதுகிறது. வடக்கு, கிழக்கு ஓர் இனப்பிரதேசமல்ல. அது பல்லின மக்கள் வாழும் பிரதேசமாகும். அதுடன் இப்பிரதேசங்களில் சில குறிப்பிட்ட இடங்கள் முஸ்லிம் மக்கள் பாரம்பரிய, மரபுவழிப் பிரதேசங்களாகும். இதில் சில பிரதேசங்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆட்சியின் கீழோ, அல்லது அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக வாழ வேண்டியவர்களோ அல்ல, என்றும் அமைச்சர் ராவூப் ஹக்கீம் அப்பேட்டியில் கூறியுள்ளார். (ம)

### யாழ்.தளபதி..

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தத் தவறான சொற்பிரயோகத்தை மொழி ஆற்றல் மற்றும் இலக்கணப் பிழையால் ஏற்பட்டதாகக் காட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் முனைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### காணாமல்...

சடலத்தில் கழிவுநீரில் ஊறிப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இம் மர்ம மரணம் தொடர்பாக முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று வவுனியாவில் உள்ள பெண்கள் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.(வ)

### மீளக்குடியமர..

கீழே வைத்தால்தான் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மீள் குடியேற்றங்கள் சாத்தியப்படும்.

ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும், அல்லது ஒப்படைக்க வேண்டும் என்று கூறும் போது, அவர்கள் தங்கள் ஆயுதங்களை எம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அவர்கள் தமது ஆயுதங்களை மூன்றாம் தரப்பினர் ஒருவரிடம் (அவர்கள் யாராக இருந்தாலும் பரவாயில்லை) கையளிக்கலாம். அதனை விடுதலைப்புலிகள் செய்வார்களானால் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு இராணுவம் தயாராக உள்ளது. விடுதலைப்புலிகளிடம் ஆயுதம் கையில் இருக்கும்வரை அது இராணுவத்தினருக்கு விடுக்கும பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

இதனால்தான் ஆயுதங்களை விடுதலைப்புலிகள் ஒப்படைக்க வேண்டுமென்று கோருகிறோம் என்றும் இராணுவத் தளபதி லெப்டினல்ட் ஜெனரல் லயனல் பலகல்லே தெரிவித்துள்ளார்.(ம)

### வடக்கு....

கிழக்கில் வாழுகின்ற பெரும்பாலான மக்கள் கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணத்தோடு இணைந்திருக்க வேண்டிய நிலை இல்லை என்று தெரிவித்துள்ளனர். இந் நிலையிலேயே மக்கள் ஐக்கிய முன்னணி, வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியே பிரிந்திருக்க வேண்டும் என்று நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் கையொப்பங்களை பெறவுள்ளதாகவும் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ம)

### ஆயிரம்...

ஆங்கில ஆசிரியர்களுக்கான தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு, தற்போது பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றி வருபவர்களிடமிருந்தும், க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் பெயர் விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.(வ )

### தனிப்பிரதி...

முஸ்லிம் புத்திஜவிகள் முழு தனித்தரப்பாக தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவேண்டும், எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள தாய்லாந்து பேச்சுவார்த்தைக்கு முன்னர் உத்தேச சமஷ்டி அடிப்படையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைக்கான தீர்வை அரசு வெளியிட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து தென் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்பாக வீதி மறியல் போராட்டம் இடம்பெற்றது.

இந்த மறியல் போராட்டத்தில தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

போராட்டம் காரணமாக கல்முனை அக்கரைப்பற்று வீதியில் காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை உள்ளூர், வெளியூர் போக்கு வரத்துக்கள் பாதிக்கப் பட்டிருந்தது. (ந-5)

### அரசு-புலிகள்...

மட்டக்குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நாளை சனிக்கிழமை சந்தித்துப் பேசிய பின் ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் ஒரே விமானத்தில் தாய்லாந்து செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக சர்ச்சைக்குள்ளாகியுள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும் ஞாயிற்றுக் கிழமை தாய்லாந்து செல்லவுள்ளனர்.

(ம)

### மீனவர்கள்..

துறையைச் சேர்ந்த சுப்பிர மணியம் ஜெயக்குமார் (வயது34) ஆகிய இருவருமே கரை திரும்பியுள்ளனர்.

தொழிலுக்குச் சென்ற படகு பழுதடைந்த காரணத்தினாலேயே திரும்பி வரத்தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை மாதகல் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளை அப் பகுதி மீனவர்களால் காப்பாற்றப்பட்டு இராணுவத்தினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

(உ-52,43)

## வலி.வடக்கு மக்கள் இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி இன்று காலை 8 மணி முதல் வலி வடக்குப் பிரதேச செயல கம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெறவுள்ளது.

வலி வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடை பெறவுள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் வலி வடக்குப் பகுதி மக்களை கலந்து கொள்ளுமாறு ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(த)

நாளை ஆரம்பம்
A/L - 2005
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
காலை 8 மணி
DMI
யாழ்.நகர்
(6324)

வலம்புரி ஆதரவுடன் மூத்த பத்திரிகையாளர்
அமரர் சி.செல்லத்துரை அவர்கள்
ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியின்
பரிசளிப்பு விழா
இடம் : வலம்புரி கேட்போர் கூடம்
காலம் : 04.01.2003 சனிக்கிழமை மு.ப 11.00 மணி
தலைவர்
கவிஞர் திரு. சு. துரைசிங்கம்
(ஆசிரியர்பீடம், வலம்புரி)
பிரதம விருந்தினர்
கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்)
(மாகாண இணைப்பாளர்)
சிறப்பு விருந்தினர்
திருமதி கோகிலா மகேந்திரன
(உதவிக் கல்விப்பணிப்பாளர்)
திருமதி அ.சண்முகானந்தன். M.A
(அதிபர்)
வாழ்த்துரை
திரு சி. வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குநர், வலம்புரி)
வரவேற்புரை
திரு. C.G. திருமாலழகன்
(ஆசிரியர்)
தொடக்கவுரை
திரு. மு. வாமதேவன்
(ஆசிரியர்பீடம், வலம்புரி)
நன்றியுரை
செல்வி செ. உமாராணி
(ஆசிரியர்பீடம்; வலம்புரி)
பரிசில் வழங்கல் பிரதம விருந்தினர்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
வலம்புரிக் குடும்பம்

கண்ணீர் அஞ்சலி
17.12.2002 அன்று கொழும்பு ஐந்து இலாம்படிச் சந்தியில் ஏற்பட்ட பட்டாசுக் கடை
தீ விபத்தில் மரணமானவர்களுக்கும்
27.12.2002 அன்று மரணமான உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவி
செல்வி செ.துவாரகாவிற்கும்
எமது சபை சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்.
[C/5534]

இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்
ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
மணிசாமி P.T.R
பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா
யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.
[C/5522]

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள் வாக்கு அம்பிகா அம்மா
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
கைரேகை ஜாதகம் பார்க்கப்படும்
ஜாதகக் குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்
* தொழில் முன்னேற்றத் தடங்கலா? * உயர் கல்வியில் தடங்கலா? * காதல் பிரச்சினையா? தோல்வியா? * திருமணத் தடங்கலா? * குழந்தைப் பாக்கியம் இல்லையா? * கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா? * தீராத வியாதியா?
இதுபோன்ற எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக சரிசெய்வதற்கான ஆலோசனைகள் கூறப்படும்
நேரில் வரவும்
அருள் வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்.121, கஸ்தூரியார் வீதி
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்/ லிங்கம் கூல்பார் அருகில்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பார்க்கும் நேரம் - காலை. 9.00மணி - மாலை4. மணி வரை
[C5546]

YARL HALL கல்வி நிலையம்
93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தரம் 4 முதல் O/L வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03-01-2003
விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்
இரா. செல்வவடிவேல்
(C/5547)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்
DSI


பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின் யாழ் குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES சுப்பர் சூஸ்
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
[C/5548]
DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

காமராஜர் பல்கலைக்கழகம்
மதுரை
M.A, M.Com
DIPLOMA IN SAIVASIDDHANTA
மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கான அனுமதிக்கப்பட்ட பாடங்களுக்குரிய விரிவுரைகள்
ஆரம்பம் 05-01-2003 2 மணி
அன்றைய தினம் பதிவை மேற்கொண்டவர்களும், மேற்கொள்ள இருப்பவர்களும் சமுகம் தரவும்.
யாழ்.இணைப்பாளர்
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி - யாழ்
[C/5545]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.